ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1974/15 - 2016 ජූලි මස 05 වැනි අඟහරුවාදා - 2016.07.05

*1974/15 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, அபிவிருத்தி உபாய கருத்திட்டங்கள் சட்டம்**

3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, அபிவிருத்தி உபாய கருத்திட்டச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் 2011, யூலை 11 ஆந் திகதிய 1714/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் கீழ் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளையினை ஆக்குகின்றேன் :-

2011, யூலை 11 ஆந் திகதிய 1714/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் கட்டளையின் கீழ் (4) ஆம் வாசகத்தின் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தினை நீடிக்கும் வகையில் பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் திருத்தப்படுகிறது :-

"(4) மேலே குறிப்பிடப்பட்ட "மேல் மாகாணத்தில் கொழும்பு1, கோட்டையில் உயர்தர வதிவிடங்கள் மற்றும் மிக உயர்தரமுடைய வர்த்தக மையம் உள்ளடங்களாக கலப்பு பயன்பாட்டு தொகுதியொன்றாக சொகுசு ஹோட்டலொன்றினை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்" 2019.06.30 ஆந் திகதி வர்த்தக தொழிற்பாடுகளை ஆரம்பித்தல் வேண்டும்."

மலிக் சமரவிக்கிரம,
உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
2016, யூன் 24.

7- 854